365

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
14 MAR 1913
MADRAS.




# சத்திய தூதன்.

MARCH, 1913. PRICE, 1 PIE.—விலை, க பை. மார்ச்சுமீ, 1913.

## NEWS AND NOTES.

### வர்த்தமானக் குறிப்புகள்.

**சிரஞ்சீவி மருந்து.**—மாலை 6 மணிக்குமேல் ஒன்றுஞ் சாப்பிடாதே என்பது டாக்ட்டர் எரல் என்பவரின் விதியாம்.

**போஸ்ட்மேன் நடை.**—ஒரு போஸ்ட்மென் தன் 27 வருஷ சர்விசிலே 1 லட்சம் 30,000 மைல் நடந்ததாகத் தெரியவருகிறது.

**உயர்தர மாணாக்கர்.** — இந்தியா முழுவதும் 31,486 உயர்தர அல்லது காலேஜ் மாணாக்கருண்டு. இவர்களில் 374 பேர்மாத்திரம் பெண்களாம். அன்றி, இவர்களிலே கிறிஸ்தவ ஸ்டூடெண்ட்மார் ஒருவேளை ஆயிரம்பேர்தான் இருக்கலாம்.

**வைஸ்ராயவர்கள்.** — நமது கவர்னர்ஜெனரல் தினந்தோறும் சுகப்பட்டுவருகிறார். சீக்கிரத்தில் சிம்லா மலைக்குப் போவார். இந்திய ஸ்திரீரத்னங்களெல்லாரும் வந்தனோபசாரப் பத்திரிகைத்தம் ஊர்களிலிருந்து கவர்னர்கள் மூலமாய் அனுப்புகிறார்கள். அவர்களுக்குண்டான விபத்தைப்பற்றித் தேசமெங்கும் துயரம் பரவியிருக்கிறது.

**லார்ட் போர்ட்லண்ட்.** — நமது கவர்னரவர்கள், இதற்குமுன்னே வேறு யாரும் செய்யாத விதமாய், பள்ளிக்கூடங்களையெல்லாம் போய்ப் பார்த்துவருகிறார். இது நல்லகாரியம். இதனாலே கல்வி யபிவிர்த்திக் கிடமுண்டாகிறது. கவர்னர் துரைசானியம்மாளும், அப்படியே பெண்கள் பாடசாலைகளைக் கண்டு உற்சாகப்படுத்திவருகிறார்கள். இவர்கள் ஆட்சிக்காலத்தில் நமது ராஜதானியில் மிக்க கல்விச்செல்வம் உண்டாகுமெனக் கோருகின்றோம்.

**பால்கன் டர்க்கி யுத்தம்.** — இந்தப் பெருஞ் சண்டை மறுபடியும் ஆரம்பித்திருக்கிறது. இரண்டாம் நகரமாகிய ஆதிரியனோப்பில் முற்றிக்கை போட்டிருக்கிறது. ஆகாயத்திலிருந்தும் குண்டுகள் கீழே விழுந்து வெடிக்கின்றன. பட்டணவாசிகளுக்கு மெத்தக் கஷ்டமும் பட்டினியுமுண்டு. நம்ம தேசத்திலுள்ள மகம்மதியர் வெகு துக்கங் கொண்டாடுகிறார்கள். ஒருவேளை யூரோப்பு முழுதுஞ் சண்டைப்பூமியானாலும் ஆய்விடுமென்று அநேகர் அஞ்சுகிறார்கள்.

**ஆப்பிள் பழங்கள்.** — படுக்கைக்குப் போகுமுன் ஒரு ஆப்பிள் பழத்தைப் புசிப்பது மருந்து சாப்பிடுவதைவிட நேர்த்தியான வழக்கமென்றும், அப்படிச் செய்வதினால் அஜீரணம் சூரியனைக் கண்டபனிபோல் நீங்கிவிடுமென்பதும் ஒரு வைத்திய நிபுணருடைய கோட்பாடு.

**கடன்செலுத்தல்.** — ஸ்டிராட்போர்ட் பட்டணத்தில் சால்வேஷன் சபையில் புதிதாய்ச்சேர்ந்த ஒருவன் அந்த சால்வேஷன் ஆபீசரிடம் நான்கு வருஷத்திற்கு முந்தி கடனாக வாங்கின 6 பென்ஸுக்கு ஒரு ஷிலிங்கு வட்டியுடன் முதலை மேற்படி ஆபீசரிடம் செலுத்தினானென்று தெரிகிறது.

**புராதன தபால் முத்திரைகள்.** — அடியில் கண்ட விபரப்படி ஒரு பழைய பிரிட்டிஷ் தபால் முத்திரை 5 பவுண்டுக்கும், யூனைட்டட்ஸ்டேட்ஸ் முத்திரை ஒன்று 60 டாலருக்கும், பிரிட்டிஷ் தென் ஆபிரிக்கா முத்திரை ஒன்று 10 பவுண்டுக்கும், ஒரு ஆஸ்டிரேலியா முத்திரை ஒன்று 100 பவுண்டுக்கும் விலைகூறி விக்கிரயத்திற்கு வந்திருக்கிறது.

**ஸ்திரீகளுக்கு வோட்டு.** — புருஷரைப்போலவே ஸ்திரீகளும் வோட்டுக் கேட்கிறார்கள். மேற்கே ஸ்திரீஜனங்கள் அதிகக் கல்வியும், நாகரீகமும், ஸ்வாதீனமும் அடைந்தவர்களானதால், ஆண்களைப்போல அவர்களும் உயர்தர உத்தியோகஞ் செய்துவருகிறார்கள். இங்கிலீஷ் பார்லிமெந்திலே தங்கள் வழக்கைத் தீர்த்து முடிக்க வேண்டுமென்று பலவாறு பிரயத்தனப்பட்டு வருகிறார்கள். இப்போது நடவாமற்போயினும், விரைவில் அவர்களுக்கு வோட்டுக் கிடைக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

**பிரிட்டன்தேசத்துச் செல்வம்.** — பிரிட்டன் தேசத்தில் வசூலாகிக்கொண்டுவருகிற தனத்தைக் குடிகளுக்குச் சரிசமமாகப் பிரித்துக்கொடுக்கும் பட்சத்தில் ஒவ்வொரு குடித்தனக்காரனுக்கு 200 பவுண் விழுக்காடு பாகம் கிடைக்குமென்று தெரியவருகிறதோடு அதை 100—க்கு 4 விழுக்காடு வட்டி கணக்கிட்டுப் பார்த்தால் பிரதிதினம் நபர் ஒன்றுக்கு $5\frac{1}{4}$ பென்னி கிடைக்குமென்று ஏற்படுகிறது.

**ஒரு புதிய லோகம்.**—துர்க்கிஸ்தான்தேசத்து பாமிர் நாட்டுக்கு வடக்கிலிருக்கிற திர்கானா மலையில் ஒரு நூதனமான லோகம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது பழுப்புநிறமுள்ள பசையைப்போல் அதிக பளுவானதாகவும் திராவகத்தில் சம்பந்தப்பட்டவுடன் அதிக குளிர்ச்சியாய்விடுகிறதென்றும் ஆனால் எந்த வஸ்துவாவது அதினுடன் சம்பந்தப்பட்டால் அது நிறையில் குறைந்துபோகிறதென்றும் தெரியவருகிறது.

**வெண்ணெய் கெட்டுப்போகாம லிருக்கும்படி செய்தல்.**—வெண்ணெய் கெட்டுப்போகாமலிருக்கும்பொருட்டுக் கொஞ்சம் வெடியுப்பைத் தண்ணீரில் கரைத்து வெண்ணெய் அடங்கிய பாத்திரத்தை அந்தத் தண்ணீர்மட்டத்தின் ஆழம்வரையில் சேரும்படி வைத்து அதின்பேரில் ஒரு ஈரத்துணியை மூடிபோல் போட்டு மூடி அந்தத் துணியின் ஓரங்கள் மேல்கண்ட வெடியுப்பு ஜலத்தில் தொட்டுக்கொண்டிருக்கும்படி வைத்துவந்தால் வெண்ணெய் ஒருபோதும் கெட்டுப்போகாமல் புது வெண்ணெய்போலிருக்கும்.

**நார்வே தேசம்.**—ஐரோப்பாகண்டத்திலுள்ள நார்வே தேசத்தில் ஞாயிற்றுக்கிழமை என்ற ஓய்வு நாள் எவ்விதமாக ஆசரிக்கப்பட்டுவருகிறதென்று பின்வருமாறு கவனிப்போமாக. அத்தினத்தில் சனிக்கிழமை மாலை 5 மணிமுதல் திங்கள்கிழமை காலை 8 மணிவரையில் அத்தேசத்திலுள்ள எல்லா ஸ்டோர்களும், ஆபீஸ்களும், மதுபானக்கடைகளும், கைத்தொழிற்சாலைகளும் மூடப்பட்டுவருகிறது. சென்ற 1892—ஆம் ஆண்டுமுதல் ஞாயிற்றுக்கிழமையில் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுகிறதில்லை. 1895—ஆம் ஆண்டுமுதல் அந்நாளில் ரொட்டிகிடங்குகளில் ரொட்டி சுடுகிறதில்லை. பிரதான பட்டணமாகிய கிறிஸ்தியானாநகரின் தெருக்களில் வண்டிகள் அந்தநாள் காலையில் ஓட்டப்பட்டு வருகிறதுமில்லை. அந்தநாளில் கடிதங்களும் ஜனங்களுக்கு போஸ்ட் இலாகாதாரர்களால் கொடுக்கப்பட்டு வருகிறதுமில்லை.

**யுத்த பயங்கரம்.** — தேசத்தில் யுத்தம் நடக்கிறபோது பிரஜைகள் எவ்வித கஷ்டத்தை யடைவார்க ளென்பதற்குப் பிற்கூறிய செய்தி போந்த அத்தாக்ஷியாகும். திரிப்போலியிலிருந்து மால்ட்டா

வுக்கு வந்த ஜனங்களைப்பற்றி ஒரு விகிதர் எழுதுகிறதாவது:—"இவ்விதக் கோரக்காட்சியை நான் எக்காலத்துங் கண்டதில்லை. காவில்வர்த் என்கிற ஸ்டீமரில் நிற்கக்கூட இடமில்லாதபடி ஜனங்கள் ஏறிவந்து மால்ட்டா சேர்ந்தார்கள். அன்ன ஆகாரமின்றி அவர்கள் பட்டபாட்டை விவரிக்க முடியாது. ஒவ்வொருவரும் திகில்பட்டுப் பரிதாப நிலைமையிலிருந்தனர். என்னைக்கண்டதும் டாக்டர் என நினைத்து எனக்கு முன்வந்து சிலர் முழங்காலில் நின்று கும்பிட்டார்கள். சிலர் கையை முத்தமிட்டார்கள். ஸ்திரீகளும் பிள்ளைகளும் வயோதிபரும் தேம்பித் தேம்பியழுதார்கள். அக்காட்சி நெஞ்சுருகத்தக்கதாயிருந்தது." தெய்வ கடாட்சத்தால் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் இவ்வித பயங்கரத்தை நாமறியாதிருக்கிறோம்.

**ஆலோசனைத் தலைவர்.**—தற்போது இங்கிலாந்துதேசத்து ஆலோசனைத் தலைவராயிருக்கிற மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் என்பவரின் தகப்பன் இறந்துபோகும் 2 வருஷத்துக்கு முன்கூட உபாத்தியாயர்வேலை செய்துவந்து 44—ம் வயதில் மரணமடைந்தார். ஆனால் இறந்துபோனவருடைய சகோதரனும் ஆலோசனைத்தலைவருக்கு சிற்றப்பனுமாகிய மிஸ்டர் ரிச்சர்ட் ஜார்ஜ் என்பவர் இவனை வளர்த்துக் கல்வியறிவைப் புகட்டினவர் டன்ட்வே கிராமத்தில் ஒரு பிரதானமான சக்கிலித் தொழில் வியாபாரம் நடத்திவந்தவரென்று தெரியவருகிறது.

**சமாதியி லிறங்கிய பிணம் திரும்பினது.** — போலாண்டில் சூராவிக்கா என்னுங் கிராமத்தில் மாஸ்னி என்கிற ஒரு மிராசுதார்வலிகண்டு கீழே விழுந்து ஸ்மரணையற்றுப் போனார். தகுந்த டாக்டர்கள் அங்கிராமையால், மிருக வைத்தியன் ஒருவன் வந்து பார்வையிட்டு, மாஸ்னி யமலோகஞ் சேர்ந்துவிட்டதாய்க் கூறினான். மனைவி மக்கள் சுற்றத்தார் எல்லாரும் மார்பிலறைந்து புலம்பி, மாஸ்னியைப் பெட்டியில் வைத்துக் கல்லறைக்குக் கொண்டுபோய் ஜெபம்பண்ணிக் குழிக்குள் இறக்கினார்கள். மண்ணைவாரிப் போடுஞ்சமயத்தில் பெட்டி யசைந்து உள்ளிருந்து மெல்லிய சத்தமொன்று கேட்டது. சமாதியைச் சூழ நின்றவரிற் பலர் பயந்து ஓட்டமெடுத்தனர். சில விவேகிகள் உடனே குழிக்குள்ளிறங்கிப் பெட்டியைத் திறக்க, மரித்த மாஸ்னி வல்லுயிர்கொண்டு குழிவிட்டு வெளியேறினான். அவனுடைய பிரேத உடையின்மேல் ஒரு இரவல்சட்டை வாங்கிப் போட்டுக்கொண்டு வீடு சேர்ந்தான். சுடுகாட்டுக்குப் போன பிணந் திரும்புமா? என்கிற பழமொழி பொய்த்தது.



வெனிஸ் நகரப் பெருமூச்சுப் பாலம்.

## FAMINE.

## பஞ்சம்.

இந்தியாவில் பல இடங்களில் பஞ்சத்தைப் பற்றி அதிக பயங்கரமாயிருக்கிறது. சில இடங்களிலுள்ள கழனிகள் ஒன்றுமில்லாமல் மொட்டையாய் விடப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம், ஆடுமாடுகள் தங்கள் தீவனத்திற்குரிய புற்களைத்தேடியும் அகப்படாமல் போகிறது. அவைகளை யுடையவர்களும், தங்கள் மிருகத்திற்கான தீவனங்களைத் தேடியும் அகப்படாததினால் மிருகங்கள் பசியினால் வருந்தி சாகிறது. இந்தியாவில் சில இடங்களில்மட்டும் நல்ல மழை பெய்திருக்கிறது. ஆனால் சில இடங்களில் பெய்த மழையினால், கழனியிலுள்ள பயிர்களைப் பசுமையாய் வைத்திருந்தபோதிலும், நல்ல விளைவைக் கொடுக்கும் என்பதைப்பற்றி நம்பிக்கையில்லை. ஜனங்கள் பற்பல இடங்களில் இரவும்பகலுமாய் மழை வருமாவென்று ஆவலோடு காத்திருக்கிறார்கள். மழை வரும் என்கிற அடையாளம் ஒன்றுமே காணாததினால் அதிகமாய் மனமுறிவடைகிறார்கள்.

மழைபெய்யாததைப்பற்றிச் சில ஜனங்கள், "கடவுள் நம்மை தண்டிக்கிறார்" என்றுசொல்லுகிறார்கள். நம்முடைய அன்பு நிறைந்த பரமபிதா என் தம்முடைய ஜனங்களை வதையவிடுகிறார் என்பதைப்பற்றித் திட்டமாய் அறிய முடியாது. ஆனால் ஒன்றுமாத்திரம் நமக்குத் தெரியும், அதாவது ஜனங்கள் தங்களுக்குக் கஷ்டம் வரும்போது மாத்திரம் கடவுளை நினைக்கவும் தேடவும் ஆரம்பிக்கிறார்கள். கடவுள் நல்லவரும், ஞானமுள்ளவர் என்பதும் நிச்சயம். ஆகையால் அவர் துன்பத்தை அனுப்பினாலும் அது நம்முடைய நன்மைக்கென்றே யிருக்கும்.

சில ஜனங்கள், இப்படிப்பட்ட பஞ்சம் உண்டாகிறதற்குக் காரணம் இங்கிலீஷ் துரைத்தனத்தின் பலன் என்று சொல்லுகிறார்கள். இது அறி

யாமையினால் அப்படிச் சொல்லுகிறார்கள். இங்கிலீஷ் துரைத்தனம் இந்தியாவுக்கு வருகிறதற்கு முந்திக் கொடிய பஞ்சங்கள் உண்டாயிருந்தது. இப்படிப்பட்ட கொடிய சம்பவங்களைப்பற்றிச் சரித்திரக் குறிப்பில் தற்காலத்தில் மதிக்கிறமாதிரி முற்காலத்திலே மதிக்கவில்லை. ஆகையால் அதைப்பற்றி நமக்குத் திட்டமான அறிவு இல்லை. ஆனபோதிலும் முற்காலத்திலும் அதிகக் கொடிய பஞ்சங்கள் இருந்தது என்பது திட்டம்.

அதுநிற்க, இங்கிலீஷ் துரைத்தனத்தார் இந்தியாவில் பஞ்சம் உண்டாகாதபடி அவைகளைத் தடுக்க அநேக ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அநேக நாடுகளிலுள்ள கழனிகளுக்கு நீர்பாய்ச்சத்தக்க கால்வாய்களை வெட்டியிருக்கிறார்கள். இங்கிலீஷ் துரைத்தனத்திற்கு முந்தியகாலத்தில் இவ்வித நீர்பாய்ச்சும் கால்வாய்கள் கிடையாது. மழை வந்தாலொழிய மற்றப்படி தண்ணீர் கிடையாது. அதோடுகூட. சர்க்கார், பஞ்சகாலத்தில் ஏழை ஜனங்களுக்கு வேலைகளைக் கொடுத்து உதவி செய்கிறார்கள். வேலை செய்யத் திறமையற்றவர்களுக்கு, கஞ்சித்தொட்டிகளைக் கட்டி ஏராளமான பலஹீன ஏழைகளுக்கு ஆகாரம் கொடுக்கிறார்கள்.

பஞ்சகாலங்களிலே விசேஷமாய், இங்கிலாந்து, அமெரிக்கா இன்னும் பல இடங்களிலிருந்து, இத்தேசத்து ஜனங்களுக்கென்று எப்போதும் பணமும் ஆகாரமும் அனுப்பப்படுகிறது.

மனுஷர்கள் ஒருவரோடொருவர் பக்ஷமுள்ளவர்களாய் ஒருவர் குறைவை ஒருவர் நிவிர்த்தி செய்து ஏழைகளையும் பலஹீனர்களையும் தாங்கும்படிக்கான ஒரு நல்ல பாடத்தை நமக்குக் கற்றுக்கொடுக்கவே கடவுள் இவ்விதப் பஞ்சத்தை அனுப்புகிறார் என்று ஒருவாறு சொல்லலாம்.

கடவுள் நமக்களித்திருக்கிற நன்மைகளிலே, தன்னயமற்றவர்களாய்க் குறைவில் நாம் பகிர்ந்து கொடுக்கிறதுக் குண்டாகிற ஆசீர்வாதத்திற்கு மிஞ்சின ஆசீர்வாதமில்லை.

கடவுள் நமக்குக் கொடுத்திருக்கிற பொருள்களெல்லாம் நமக்குச் சொந்தமல்ல, அவைகளெல்லாம் இரவல் என்றே சொல்லவேண்டும். நாம் அவைகளைக் கொஞ்சக்காலம் உபயோகப்படுத்திக் கொள்ள இரவலாக வாங்கியிருக்கிறோம். அப்படியிருக்க, அப்பொருள்களையெல்லாம் தன்னயத்தோடும், ஆத்திரத்தோடும் நாமே அநுபவிக்கப் பார்க்கிறதினால் ஆசீர்வாதமல்ல, கடவுளுடைய சாபமே உண்டாகும்.

ஆகையால் இவ்விதமான நல்ல பாடங்களை மனுஷர்களுக்குக் கற்றுக்கொடுக்கவே பஞ்சத்தைக் கடவுள் அனுப்புகிறார் என்று சொல்லலாம்.

## SCIENCE IN HINDUISM.

ஹிந்துமார்க்கத்தில் கற்பிக்கப்படுகிற

## சாஸ்திரப் பிரமாணங்கள்

அல்லது

## கல்விக் குறிப்புகளைக் குறித்தது.

ஹிந்துக்களுடைய ஆகமங்களை ஆராய்ந்திருக்கிற வித்வான்கள் உபநிடதங்களிலும், சூத்திரங்களிலும் அநேகவகைத் தப்பிதங்கள் இருக்கிறதைப் பார்த்து, தங்களுக்குள் வழங்கிய ஆகமங்கள் கடவுளால் அருளிச்செய்யப்பட்டதென்றால், சாஸ்திரம் அல்லது கல்வி விஷயங்களைப்பற்றிய இந்தத் தப்பிதங்கள் எப்படி வருமென்று கூச்சப்படுகிறார்கள். இதற்கு வேறே போக்குச்சொல்ல இடமில்லாமல், அவர்களில் அநேகர் இப்படிச் சொல்லுவார்கள். "ஹிந்துக்களுடைய சாஸ்திரப்பிரமாணங்கள் பேர்பிரஸ்தாபமானவராகிய வேதவியாசரால் முதலில் முறையாய் ஏற்படுத்தப்பட்டது. இவ்வகைப்பட்ட சாஸ்திரக் கொள்கைக்கும், வேதாந்தக் கொள்கைக்கும் சம்பந்தமில்லை. சாஸ்திரம் வேறே, வேதம் வேறே" என்பார்கள். பெரும்பாலும் இது உள்ளதுதான். ஆனாலும் ஹிந்துக்களுடைய ஆகமங்களில் இவ்விரண்டும் சேர்க்கையாய்வருகிற முறையைப் பார்க்கும்பொழுதில் இப்பொழுதுள்ள ஹிந்துக்கள் இவைகளை வேற்றுமைப்படுத்துவது நியாயம் என்று தோன்றவில்லை. உபநிடதங்களை எழுதினவர்கள் இப்படிப்பட்ட வேற்றுமைக் குறிப்பு ஒன்றாவது காட்டவில்லை. "இன்னது வேதம், இன்னது சாஸ்திரம்" என்றும், "இன்னதைத் தள்ளவேண்டும் இன்னதை அங்கிகரிக்கவேண்டும்" என்றும், "இன்னது மனிதர் ஏற்பாடு இன்னது தேவ ஏற்பாடு" என்றும் ஒருபோதும் வகுப்புப்படுத்திச் சொல்லுகிறதில்லை. அவர்களுடைய எண்ணப்படி எல்லாவகை ஞானமும் ஒன்றே. எல்லாவகை ஞானமும் பிரமத்தை அறிவதற்கு அநுகூலப்படுமென்று நினைத்தவர்கள்போலவே எழுதியிருக்கிறார்கள். வேதாந்த தரிசனத்திலும், உபநிடதங்களிலும், போதித்திருக்கிற விஷயங்களெல்லாம் சேர்க்கையாயும், ஒரே நூலுக்குக் கிளைகளாயுமிருந்தாற்போல், அவைகளைச் சீஷருக்குப் படிப்பிக்கிற குருக்கள் இவைகளை ஓதுவிக்கும்பொழுது, இன்னின்னது அக்காலத்தில் அபிப்பிராயமாகக் கொண்டதாய்ப்போதியாமல் இவை ஒவ்வொன்றும் மெய்ப்பொருள்போலவே போதிக்கிறார்கள். இப்படியாக, கட உபநிடதத்தில் யாமா என்பவர் தாராளமாய்ச் சொர்க்கத்தைக்குறித்தும், பிரமலோகத்தைக் குறித்துஞ் சொல்லி, அவ்விடத்தில் ஒருவன் சேரவேண்டிய வகையையுந் தெரியக் காட்டுகிறார். அதைச்சொல்லியதுபோலவே மனிதருடைய இரத்தப்பையாகிய ஈரற்குலையும், மூளையும் சம்பந்தப்பட்டிருக்கிற வகையையும் சொல்லுகிறார். அவர் சாதித்திருக்கிற இந்த இருவிஷயங்களையும் நாம் பிரிப்பதெப்படி? சொர்க்கத்தைக்குறித்து அவர் சொல்லியிருக்கிறதை நம்புவோமா? அல்லது இரண்டும் தப்பிதம் என்று தள்ளுவோமா? ஆராய்ந்து அறியக்கூடியதில் அவர் தப்பிதம் பண்ணினாரென்றால், ஆராய்ந்து அறியக்கூடாததில் அவர் தப்பிதம் பண்ணவில்லை என்பதற்கு நிச்சயமென்ன? அப்படியே மண்டேகத்தில் அங்கிரா என்பவர் சௌனகருக்கு உபதேசம் பண்ணுவதில் பிரம ஞானத்தினால் உண்டாகிய சிறந்த பலனை விஸ்தரித்துக் கற்பிக்கிறதுபோலவே இப்பூமியினுடைய ஸ்திதிகளைக் குறித்தும் கற்பிக்கிறார். இதில் அளவிறந்த தப்பிதங்களிருக்கின்றது. ஆனாலும் இவ்விரண்டு விஷயங்களையும் இவர் ஒன்றுபோலவே அதிகாரத்தோடு உபதேசித்திருக்க, பிரம ஞானத்தைக்குறித்துத்தான் அவர் சொன்னதை ஒப்புக்கொள்ளவேண்டும்; மற்றதை ஒப்புக்கொள்ளக் கூடாதென்று என்னமாய்ச் சொல்லலாம். நாம் இவைகளை இப்படிப் பிரிக்கக்கூடாது, ஹிந்துக்களுடைய சாஸ்திரம் தப்பிதம் என்றால், அவர்களுடைய வேதமும் தப்பிதமென்றே தீர்மானிக்கவேண்டும். இப்படியிருக்கிறபடியால், இந்தக் காரியத்தைச் சற்று ஆராய்வோமாக.

(இன்னும் வரும்.)

## "TRUST AND OBEY."

## "நம்பு, கீழ்ப்படி."

Tune and words:
"When we walk with the Lord."
Sacred Songs and Solos:—No. 642, New.

1. **யேசுவோடு** கூட
வேதங்காட்ட நட,
என்ன, நல்வெளிச்சங் காட்டுவார்!
நற்சித்தம் செய்யப்பார்,
உன்னோடு வசிப்பார்,
நம்பிக் கீழ்ப்படிந்தால் வசிப்பார்.

*Chorus.* நம்பு, பணி, இல்லை வேறு வழி,
**யேசுவில்ஆநந்திக்கநம்பி நீகீழ்ப்படி.**

2. துன்பம், துயரமோ!
துஷ்டர் விரோதமோ!
இன்பமுகம் பறக்கடிக்கும்;
சந்தேகம், பயமோ!
கண்ணீர் பெருமூச்சோ!
நம்பிக் கீழ்ப்படிந்தால் பறக்கும்.

3. பாரமோ, பளுவோ!
களைப்போ, இளைப்போ!
படும் பாட்டுக்கு உண்டு பாக்யம்;
நஷ்டமோ, நாசமோ!
கஷ்டமோ, குருசோ!
நம்பிக் கீழ்ப்படிந்தால் சலாக்யம்.

4. பேரன்பை ருசிக்க,
**யேசுவில்** களிக்க,
ஒப்புக்கொடு எல்லாவற்றையும்;
மா அருள் பொழிவார்,
பேரின்பந் தருவார்,
நம்பிக் கீழ்ப்படிவோ ரெல்லார்க்கும்.

5. இன்ப ஐக்யம் நாடி,
**யேசு** பாதந் தேடி,
**யேசுவோடு** கூட நடப்பேன்;
சொன்னபடி செய்வேன்,
சொல்லுமிடஞ் செல்வேன்,
நம்பிக் கீழ்ப்படிந்து அஞ்சிடேன்.

P. B.

'Paradise Lodge,'
Royapuram, Madras.

## THE RELIGIONS OF INDIA.

## இந்துதேச சமயங்கள்.

நம் தேசத்து ஜனங்களில் பின்வரும் மதாநுசாரிகள் உண்டு. 1911-ம் ஸூக் கணக்கின்படி,

| | |
|---|---|
| யூதர் | 21,000. |
| பார்ஸீயர் | 1,00,000. |
| சமணர் | 12,48,000. |
| சீக்கியர் | 30,14,000. |
| கிறிஸ்தவர் | 38,76,000. |
| ஆவேச வணக்கக்காரர் | 1,02,95,000. |
| புத்தர் | 1,07,21,000. |
| மகம்மதியர் | 6,66,23,000. |
| இந்து சமயிகள் | 21,75,87,000. |

வேறுவிதமாய்ச் சொல்லின், இத்தேசத்தவர்களில் நூறுபேருக்கு அறுபத்தொன்பதுபேர் இந்துக்கள், இருபத்தொருபேர் மகம்மதியர், மூன்றுபேர் புத்தர், மூன்றுபேர் ஆவேச வணக்கக்காரர், ஒருவன் கிறிஸ்தவன். யூதரும் பார்ஸீயரும் மிச்சமாய்ப் பம்பாய் ராஜதானியில் வசிக்கின்றனர். சமணரைப் பம்பாய், ராஜபுதனம், மத்திய இந்தியா நாடுகளில் காணலாம். சீக்கியர் பஞ்சாபுக்குரியவர்கள். புத்தரில் பெரும்பான்மையோர் பர்மாவில் உண்டு. மகம்மதியரையும் கிறிஸ்தவர்களையும் ஏகதேசம் நம் தேசத்தின் எப்பாகத்திலும் காணலாம். மகம்மதியரில் 2,50,000 பேர் கீழ்வங்காளத்தில் வசிக்கிறார்கள். கிறிஸ்தவர்களின் மொத்தத் தொகையில் மூன்றில் இரண்டு பங்குப்பேர் சென்னை ராஜதானியிலுண்டு. பர்மா ஒன்றுதவிர, மற்றெல்லாப் பிரிவுகளிலும் இந்து சமயத்தார் ஏராளமாய் உண்டு.

மேலேகாட்டிய சமயங்கள் ஒவ்வொன்றைப்பற்றியும் சிற்சில குறிப்புகள் இங்கு வரைவோம்.

1. **யூதசமயம்.**—யூதர் நம் தேசத்தில் பூர்வகாலம் தொடங்கி வாசம்பண்ணி வந்திருப்பதாய்த் தோன்

றுகிறது. உத்தேசம் கிறிஸ்துவுக்குப்பின் முதலாம் இரண்டாம் நூற்றூண்டுகளில் அவர்கள் இங்கே வந்து குடியேறியிருக்கலாம் என்பது அநுமானம். பம்பாய், பூனு, கொச்சி என்ற நகர்களில் யூதர் குடியேற்றங்கள் உண்டு. இவ்விடங்களில் பல ஜெப ஆலயங்களும், ஜெப ஆலயங்களைச் சேர்ந்த பள்ளிக் கூடங்களும் இருக்கின்றன. தோல் சுருளில் எழுதிய பழைய ஏற்பாட்டுக் கையெழுத்துப் பிரதிகளிலிருந்தே இன்னும் பாடம் வாசிக்கிறூர்கள். குறிக்கப்பட்ட பாடத்தை நின்று வாசிக்க, ஜெப ஆலயத்தின் மத்தியில் ஓர் பீடமும், சுவரோரம் ஆசனங்களும், ஸ்திரீகள் ஆராதிக்க மேல்தட்டில் ஆரோகண ஆசனங்களும் உண்டு. பழக்க ஒழுக்கங்களில் இவர்களும் பூர்வகாலத்து யூதரைப்போலவே சடங்காசாரக்காரராயும் மதவைராக்கிய முடையோராயும் விளங்குகின்றனர். யூதர் பெருத்த வியாபாரிகள்; மிகுந்த ஐசுவரியவான்கள். இவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பாதபடியால் "மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்போது, இந்நாள்வரைக்கும் முக்காடு அவர்கள் இருதயத்தின்மேல் இருக்கிறது." சில இடங்களில் இவர்கள் பிள்ளைகள் கிறிஸ்தவ பாடசாலைக்கு வருகிறூர்கள். நம் தேசத்தில் வசிக்கும் 21,000 யூதருக்காக விசேஷமாய்ப் பிரார்த்திப்பது நமது கடமை. (இன்னும் வரும்.)

## THE DECALOGUE IN VERSE.

## தசப்பிரமாண விளக்கம் (தொடர்ச்சி).

### 8. முத்திக்கவி—பொய்.

பல்லவி.

முத்தி கிடையாதடா—ஒருக்காலும்
முத்தி கிடையாதடா.

சரணங்கள்.

48

உள்ளதை யில்லதென்றும் இல்லதை யுள்ளதென் [றும்
வல்ல சாதுரியத்தால் வழக்காடும் பொய்யருக்கு-மு

49

கூட்டிக் குறைத்துப்பல கோணல்களை நோக்கி
நீட்டிப் புரட்டிநடு நீதியைக் கெடுப்பவர்க்கு—முத்

50

அச்ச முகத்தாட்சி ஆதாய மொன்றைநாடி
பட்சபாதக சாட்சி பகர்ந்திடும் பொய்யருக்கு-முத்

51

ரண்டருத்தம் படப்பேசி நன்மைவரத் தீமைசெய்து
ஒன்றுசெய் தொன்றூய்நடிக்கும் உயர்ந்த புளுகரு [க்கு—முத்

52

சிற்றின்பக் கவிபாடிச் சிறுவர்களைக் கெடுத்து
மற்றுஞா ஞர்த்தமோதும் வஞ்சகர் கவிஞருக்கு-மு

53

மிஞ்சிக் கடன்வாங்கி மேன்மையற வாக்குமீறி
அஞ்சாது மேல்மினுக்கும் அற்பத்தன யோக்கியர்க் [கு—முத்

54

முன்னுக நின்று முகத்துதிகள் பேசி [கு—முத்
பின்னேபோய் நிந்தைசொல்லும் பேயி னடியார்க்

55

மல்லிகை முல்லைரோஜா மானேயென்றுந் தேனே [யென்றும்
பொல்லாத பெண்டுகளைப் போற்றுகின்ற பொய்ய [ருக்கு—முத்

56

நல்ல மனைவிகளை நாயென்றும் பேயென்றும்
சொல்லி மனமுறிக்குந் துடிநாக் குடையவர்க்கு-மு

57

ஏக மனுக்குலத்தை எத்தனையோ ஜாதிகளாய்ப்
பாகம் பிரித்துப் பகைவிளைக்கும் பொய்யருக்கு—மு

(இன்னும் வரும்.) G. S. V.

## MEDITATIONS ON THE PASSION.

## திவ்ய ரட்சகரின் பாடுகளின் பேரில் ஒப்பாரி.

(தொடர்ச்சி.)

146. தாயாரை ஒப்புவிக்கச்—சகிக்காம லம்மாளும்
வாயாரக் கூவ—வடியுதே கண்ணீரும்.

147. கண்ணீரா ரூயோடக்—கதறி யழுதழுது
மண்மீதி லேபுரண்டு—மார்பி லடிப்பாளாம்.

148. அடிப்பாள் துடிப்பாள்தன் — அங்கங் குலையு தென்பாள்.
படிமீதிற் பாவிகட்காய்-பலியான தன்மகனுல்.

149. தன்மகனுற் பூலோகம் — தழைப்பதுண்மை யானுலும்
கன்மனதோ வென்மனது-கலங்காதோ சொல் லுமென்பாள்.

150. என்று புலம்பியம்மாள்—இருக்குமந்த வேளை யிலே
குன்றில் நடந்தசெய்தி—கூறக்கே ளந்நேரம்.

151. அந்நேரம் வீரரவர்—அங்கிக்காய்ச் சீட்டெழுதி
சொன்னபடி போட்டெடுத்துச்—சோமனைப் பங் கிட்டார்கள்.

152. பங்கிடும் நேரத்திலே—பகருவா ரென்தேவே
இங்கெனைக் கைவிட்ட—தேதோவென் ஐயா வே.

153. ஐயாவே மாந்தருமக்—கனியாயஞ் செய்ததற் கோ
துய்யா வுமதுமுகந்—தோன்றுதில்லை கொஞ்ச மெனும்.

154. என்றுபெருஞ் சத்தமிட்டு—எல்லாருங் கேட் பதற்கு
இன்றெனக்கு மெத்த—இருக்குதே தாகமென் ரூர்.

155. தாகமென்ரூர்க் கீசோப்பு — தண்டிற்கடற் காளானை
அவசர மாய்ப்பூட்டி—அதிற்காடி யைத்தோய் த்து

156. தோய்த்துக் கொடுக்கச் — சுவைத்து முடிந்த தென்று
சாய்த்தார் தலையைப்பின்—தம்பிதா வைநோ க்கி.

157. பிதாவே உமதுகரம் — பிரியமா யென்னுவி,
இதோநான் தாறேன்—என்றுரத்த சத்தமுடன்.

158. சத்தமா யொப்புவிக்க—ஜடதியா யவ்வுயிரும்
அத்திசை யோரறியக்—கர்த்தனிடம் போன துவே.

159. போனவுட னந்தப்—பூமிய திர்ந்திடவும்
வானம் மிகக்கறுத்து—வரைகள் பிளந்திடவும்.

160. பிளந்திடவு மாலயத்தின்—பெரிய திரைகிழி ந்து,
தளங்கள் கலங்கிடவும்—சமாதி திறந்திடவும்.

(இன்னும் வரும்.)

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, Tract Dépôt, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சன்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| எக்காலக் கண்ணி ... ... ... ... ... | 0 | ½ |
| எபேசியர் நிருப வியாக்கியானம் ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2—ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபை சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றூட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலை தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 8 |
| மாலை தியானம் ... ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| பரிசுத்த ஜீவியம் ... ... ... ... ... | 0 | 2 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| " " பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| " " நல்ல கட்டடம் 6 அணு, 7 அணு. | | |
| " ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரஸம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.

### மார்ச்சுமீ பஞ்சாங்கம்.—

| வாரம். | மார்ச்சுமீ = மாசி—பங்குனி. ⊙ பௌர்ணமி, 22௳ ● அமாவாசை, 7௳ | | | | | | மாசி—பங்குனி. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 2 | 9 | 16 | 23 | 30 | ... | 19 | 26 | 3 | 10 | 17 |
| திங்க ... | ... | 3 | 10 | 17 | 24 | 31 | ... | 20 | 27 | 4 | 11 | 18 |
| செவ் ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| புதன்... | ... | 5 | 12 | 19 | 26 | ... | ... | 22 | 29 | 6 | 13 | ... |
| வியா ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | ... | 23 | 30 | 7 | 14 | ... |
| வெள்... | ... | 7 | 14 | 21 | 28 | ... | ... | 24 | 1 | 8 | 15 | ... |
| சனி ... | 1 | 8 | 15 | 22 | 29 | ... | 18 | 25 | 2 | 9 | 16 | ... |

### விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1913